அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :165 /2017
தேதி :24.12.2017

## ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் - மக்கள் தீர்ப்பை மதித்து, டிடிவி.தினகரன் அவர்களுக்கு வாழ்த்து.

### அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

2004 ஆம் ஆண்டிற்குப் பிறகு, 13 ஆண்டுகள் கழித்து, இடைத்தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி அடைந்திருக்கும் வரலாறு ஆர்.கே.நகர் இடைத்தேர்தல் முடிவு மூலம் படைக்கப்பட்டிருக்கிறது. அதிலும், இடைத்தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி வெற்றிபெறாமல், சுயேட்சை வேட்பாளர் வெற்றிபெற்றிருப்பதும் இதுவரை நிகழ்ந்திராத முடிவு.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களின் மறைவிற்குப் பிறகு, கடந்த ஏப்ரல் மாதம் நடந்திருக்கவேண்டிய இடைத்தேர்தல் ரத்து செய்யப்பட்டதை அடுத்து, தற்போது நடந்த இடைத்தேர்தல், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அதிமுகவின் இரட்டை இலைச் சின்னம் கடந்த இடைத்தேர்தலின்போது முடக்கப்பட்டு மீண்டும் அச்சின்னம் அதிமுகவிற்கு கிடைத்திருக்கும் நிலையிலும், திமுகவிற்கு கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு எண்ணிக்கை அதிகரித்திருப்பதோடு, 2G வழக்கில் சாதகமான தீர்ப்பு வந்த நிலையிலும், மத்தியில் ஆளும் கட்சியான பாஜக, சில தினங்களுக்கு முன், குஜராத் மற்றும் இமாசலப் பிரதேச மாநில பொதுத்தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியிருக்கும் நிலையிலும், இம்மூன்று கட்சிகளுக்கும் இத்தேர்தல் எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாமல், அதிக வாக்கு வித்தியாசத்தில் ஒரு சுயேட்சை வேட்பாளர் வெற்றி பெற்றிருக்கும் அதிசயத்தை ஆர்.கே.நகர் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியிருக்கிறது.

..2

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



2001 ஆம்ஆண்டுக்குப் பிறகு, ஒரு சுயேட்சை வேட்பாளர் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பது ஒரு சாதனை. முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மறைந்து ஓராண்டு காலம் ஆகியிருக்கும் நிலையில், அவர் 2016 ஆம் ஆண்டு இதே தொகுதியில் பெற்ற 39,545 வாக்குகள் வித்தியாசம் என்ற சாதனையைக் கடந்து, தற்போது 40,707 வாக்குகள் வித்தியாசத்தில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட திரு.டிடிவி.தினகரன் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்.

கடந்தமுறை ஆளும்கட்சி ஆதரவு வேட்பாளர் என்றிருந்த நிலை தற்போது இல்லாமல், கடந்தமுறை கிடைத்து போட்டியிட்ட சின்னமும் தற்போது கிடைக்கப்பெறாமல், வெற்றிபெற்றிருக்கும் டிடிவி.தினகரன் அவர்களுக்கு என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு தேர்தலில் வாக்காளர்கள் அளித்திருக்கும் தீர்ப்பு மதிக்கப்படவேண்டும் என்ற அரசியல் யதார்த்தம் மற்றும் அரசியல் நாகரிகம் கருதி ஆர்.கே நகர் இடைத்தேர்தலில் வெற்றிபெற்றிருக்கும் டிடிவி.தினகரன் அவர்களுக்கு என் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com